செ.கு. எண் 57 நாள் 8.2.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 8.2.2012

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் வட்டம், மெய்யம்புளி கிராமம், அருள்மிகு ஏகாந்தராமர் திருக்கோயில் அருகே 6.2.2012 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது ராமேஸ்வரத்திலிருந்து திருச்சிராப்பள்ளி சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த மெய்யம்புளி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜீவாநந்தம் என்பவரின் மகன் திரு. ஆரோக்கிய ராபின் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இச்சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. ஆரோக்கிய ராபின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான திரு. ஆரோக்கிய ராபின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9